உ

# சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை வரலாறு

சென்னை மாநகரத்திற்கு தெற்கே சுமார் 550 கி.மீட்டர் தொலைவில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 108 திவ்ய சேத்திரத்தில் ஒன்றான திருத்தங்கல்லில் திருநின்ற நாராயண பெருமாள் உடன் செங்கமல நாச்சியார் ஆகிய இருவரும் தண்கால மலையில் நின்று இங்கு தங்கி அருள் பாலிப்பதால் திருத்தங்கல் என்று பெயர் பெற்ற ஊர் அமைந்துள்ளது. இவ் ஊரில் உள்ள தண்கால மலையில் தென்திசையில் திருநின்ற நாராயண பெருமாள் கோயிலும் வடதிசையில் கருநெல்லி நாதர் கோயிலும் மற்றும் பால தண்டாயுதபாணி கோயிலும் ஒருங்கே அமைய பெற்று அருள் பாலிக்கின்றனர். மேலும் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறைக்கு சொந்தமான சிங்காரத்தோப்பு விநாயகர் திருக்கோயில் , அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அருள்மிகு சக்தி மாரியம்மன் திருக்கோயில்களின் அருளால் சிறப்புற்ற இவ் ஊரில் பிறந்து, வளர்ந்து தங்கள் வாழ்வாதாரத்தை தேடி இடம் பெயர்ந்து சென்னை மாநகரில் குடிபெயர்ந்து கடை சிப்பந்திகளாகவும், வணிகர்களாகவும் மற்றும் சிறு தொழில் செய்தும் வந்தனர். இம்மக்களிடையே ஒற்றுமை வளர்க்கவும் வாழ்வில் மேன்மை அடையவும் உறுதுணையாக இருக்கும் பொருட்டு உறவின்முறை உருவாக்க முடிவு செய்து நம் குல பெரியோர்களான திரு. S. குருசாமி நாடார், இராஜபாளையம் திரு. P.S. தங்கையா நாடார், திருச்சி திரு. M.S. இராமையா நாடார், திரு. T.A.S. ஆறுமுக நாடார் ஆகியோரின் பெரு முயற்சியால் திரு. T.A.S. ரத்தினம் & பிரதர்ஸ் அவர்களுக்கு சொந்தமான சென்னை - 21, கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள பாக்கியம் பவனில் வைத்து 14.09.1956 அன்று கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திருச்சி திரு. M.S. ராமையா நாடார் அவர்களின் திருகரத்தால் மஞ்சள் தேய்த்து எழுதி துவக்கி வைக்கப்பட்டது, சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டு ஆரம்பிக்கப்பட்டு முறையான நிர்வாக அமைப்பு உருவாக்கபட்டது.

| | |
|---|---|
| **தலைவராக** | உயர்திரு. T.A.S. செல்லையா அவர்களும் |
| **உபதலைவராக** | உயர்திரு. வெ.பு. குருசாமி நாடார் அவர்களும் |
| **செயலாளராக** | உயர்திரு. K.S.P. கணேசன் அவர்களும் |
| **பொருளாளராக** | உயர்திரு. S.M. குருசாமி நாடார் அவர்களும் |

**நிர்வாகக் குழு உறுப்பினர்களாக:**

உயர்திரு T.S. அருணாசல நாடார்
உயர்திரு கா.மு. காவடியப்ப நாடார்
உயர்திரு S.A. கிருஷ்ணசாமி நாடார்
உயர்திரு கா. தங்கப்ப நாடார்
உயர்திரு P.S. மாரியப்ப நாடார்
உயர்திரு A.S.P. மகாலிங்க நாடார்
உயர்திரு A.S. மாரியப்ப நாடார்
உயர்திரு M.G. இருளங்குடி நாடார்
உயர்திரு அ. துரைச்சாமி நாடார்
உயர்திரு கா. தங்கைய நாடார்
உயர்திரு A.S. இருளங்குடி நாடார்
உயர்திரு மா. வேல்சாமி நாடார்

ஆகியோர்களை கொண்ட நிர்வாகக் குழு உருவாக்கப்பட்டது.

மாதம் தோறும் மகமை வசூல் செய்வதற்கு வசூலாளர் இன்றி நிர்வாகக் குழு உறுப்பினர்களே முன்நின்று வசூல் செய்து வந்தனர். இங்ஙனம் வசூலித்து தந்தவர்களில் திரு. S.M. குருசாமி நாடார், திரு. K.S.P. கணேச நாடார், திரு. A.S. மாரியப்ப நாடார், திரு. K. தங்கப்ப நாடார், திரு. S.M. தங்கச்சாமி நாடார் ஆகியோர் முன்நின்றனர், இப்படி வசூலுக்குச் செல்லும் நேரங்களில் ஆங்காங்கே மற்றவர்கள் உடன் வந்து, ஒத்துழைத்து ஊக்குவித்தவர்களில் கல்வித் தந்தை திரு. S.A. கிருஷ்ணசாமி நாடார், புதுப்பேட்டை திரு. S. முத்தையா நாடார், பார்க்டவுன் திரு. V. குருசாமி நாடார், ஜப்பான் திரு. M. கூடலிங்க நாடார், லதாஸ் திரு. தங்கப்ப நாடார் ஆகியோரை முக்கியமாக கூறலாம்.

நமது உறவின்முறை 1960ஆம் ஆண்டு சங்க பதிவு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டது. சங்க பதிவு எண். 114 / 1960 ஆகும்.

மேலும் உறவின்முறைக்கு வருவாயை பெருக்கவும் உறுப்பினர்களிடையே தொழில் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு 1967ஆம் ஆண்டு பரஸ்பரநிதி உதவி திட்டம் தொடங்கப்பட்டது, பலர் மலைத்து பின்வாங்க தைரியமாக முன்வந்து இதற்கு வித்திட்டவர்கள் திரு. S. சின்னத்துரை நாடார், திரு. G. சோமசுந்தரம், திரு. G. சௌந்திரபாண்டியன் மற்றும் G. சிவநேச பாண்டியன் ஆகியோர் ஆவர். இந்த பரஸ்பர நிதிஉதவி திட்டத்தின் மூலம் பலர் ஏற்றம் பெற்று வாழ்கை வளம் காண உறவின்முறை மூலம் வழி செய்து கொடுக்கப்பட்டது. பரஸ்பர நிதிஉதவி திட்டமே பின்னாளில் உறவின்முறை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது.

நமது உறவின்முறை வளர்ச்சியின் அடுத்த கட்டமாக திருமண மண்டபம் கட்டுவதென முடிவு செய்து 25.02.1972 ஆம் ஆண்டு வண்ணையம்பதியில், G.A. ரோட்டில் மூன்று மனை (கிரவுண்ட்) இடம் வாங்கப்பட்டது. 1982ஆம் ஆண்டு பூமி பூஜை செய்து கட்டிட வேலை துவங்கப்பட்டது. அன்றைய நிர்வாகத்தினரின்

| | |
|---|---|
| **தலைவர்** | திரு. S.M. குருசாமி நாடார் |
| **துணைத்தலைவர்** | ராஜா. திரு. K.S.P. கணேச நாடார் |
| **செயலாளர்** | திரு. p. ராஜரத்தினம் |
| **துணைச்செயலாளர்** | திரு. S.K.A. சவரிமலையான் |
| **பொருளாளர்** | திரு. M.G. இருளங்குடி நாடார் |

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:**

திரு. S.M. தங்கச்சாமி நாடார்
திரு. S. முத்தையா நாடார்
திரு. A.D. சுப்பையா
திரு. A. தங்கராஜ்
திரு. S. சந்திரசேகரன்
திரு. M. நடராஜன்
திரு. M. பஞ்சவர்ணம்
திரு. L. முருகையா
திரு. S. அய்யாத்துரை
திரு. T. சதாசிவம்
திரு. S. மாரியப்பன்

ஆகியோரது பெரும் முயற்சியாலும் அன்றைய பொருளாளர் உயர்திரு. M.G. இருளங்குடி நாடார் அவர்களது அயராத உழைப்பாலும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 23.05.1983 ஆம் ஆண்டு "திருத்தங்கல் நாடார் அரங்கம்" திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு திரு. P. இராஜரத்தினம் அவர்கள் வரவேற்புரை ஆற்ற விழா குழு தலைவர் ராஜா திரு. K.S.P. கணேச நாடார் அவர்கள் தலைமையில் திரு. S.M. குருசாமி நாடார் அவர்கள் முன்னிலையில், திரு. M.G. இருளங்குடி நாடார் கட்டிடத்தை திறந்துவைக்க திருமதி. S. செல்லம்மாள் சோமசுந்தரம் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்கள். திரு. T.A.M. தங்கமுத்து நாடார் அவர்கள் நிகழ்ச்சி நிரல் கல்வெட்டையும், திரு. A.S. ராஜப்பன் அவர்கள் வள்ளல் வரிசை கல்வெட்டையும் திறந்து வைத்தார்கள். திரு. A.K. சின்னதுரை நாடார் அவர்கள் ஊழியர்களுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தார்கள், திரு. S.K.A. சவரிமலையான் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஒரு சிறப்பு உண்டு, நாம் உழைத்து உருவாக்கிய அரங்கத்தை அரசியல்வாதியோ அல்லது அதிகாரியையோ அழைத்து நிகழ்ச்சியை நடத்தாமல் உழைத்த உத்தமர்களை கொண்டு நிகழ்ச்சியை நடத்தியுள்ளோம்.

நமது உறவின்முறையின் வளர்ச்சியின் அடுத்த கட்டமாக கல்வி சேவை செய்வதென முடிவு செய்து 20.09.1987 அன்று திருத்தங்கல் நாடார் எஜூகேஷனல் சொசைட்டி என்ற அமைப்பு தொடங்கப்பட்டு 27.07.1988 அன்று சங்க பதிவு துறையில் பதிவு செய்யப்பட்டது . இந்த அமைப்பு நமது சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டிற்கு கட்டுப்பட்டது. சென்னை மாநகரில் பல உறவின்முறைகள் பள்ளி கல்வி சேவையில் ஈடுபட்டுருக்க நமது உறவின்முறை அனைத்திற்கும் முன்னோடியாக கல்லூரி துவங்குவதென முடிவு செய்து சென்னை -51, சேலவாயல் என்ற இடத்தில் சுமார் 7.5 ஏக்கர் பரப்பளவில் இடம் திருத்தங்கல் நாடார் எஜூகேஷனல் சொசைட்டி பெயரில் வாங்கப்பட்டது, மேலும் பல தவனைகளாக சிறு சிறு இடம் வாங்கப்பட்டு மொத்தம் 9.41 ஏக்கரில் இடம் உள்ளது. இவ்விடத்தில் அன்றைய நிர்வாககத்தினரின்

| | **சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டு** | **திருத்தங்கல் நாடார் எஜூகேஷனல் சொசைட்டி** |
|---|---|---|
| **தலைவர்** | P. ராஜரத்தினம் | M.S. சின்னதம்பி நாடார் |
| **துணைத்தலைவர்** | T. ரத்தினசாமி | S. தங்கரத்தினம் M.com., AICWA |
| **செயலாளர்** | S.M. சுப்பையா | R.G. சந்திரமோகன் |
| **துணைச்செயலாளர்** | A.S.D. மாரியப்பன் B.Sc., | P.B. மணிவண்ணன் B.Sc.,, B.L., |
| **பொருளாளர்** | C. கனிரதம் | C. கனிரதம் |
| **நிர்வாகக்குழு உறுப்பினர்கள்** | M.S. சின்னதம்பி நாடார் | P. ராஜரத்தினம் |
| | G. சிவநேசபாண்டியன் | T. ரத்தினசாமி |
| | R.G. சந்திரமோகன் | S.M. சுப்பையா |
| | N. மூக்கையா | A.S.D. மாரியப்பன் B.Sc., |
| | R. பாண்டியன் | G. சிவநேசபாண்டியன் |
| | A. பாபு சுப்பையா B. Com., | C. மாணிக்கவேல் B.E., |
| | S. சென்னை அரசன் | A. மாரியப்பன் B.E., |
| | E. பிச்சைக்கனி | M. ராஜாமணி B.E., |
| | T. சந்திரமோகன் | T. ராஜ்குமார் B.B.A., |
| | T.A. வேல்முருகன் B.Com., | T.A. வேல்முருகன் B.Com., |
| | A. மாரியப்பன் B.E., | A.P. கமலாகரராவ் பிரின்ஸிபால் M.A., Phd., |

பெரும் முயற்சியாலும், அண்ணாச்சி திரு. ராஜா K.S.P. கணேச நாடார் அவர்களுடன் திரு. P. ராஜரத்தினம், திரு. G. சிவநேசபாண்டியன் அவர்களின் அயராத உழைப்பாலும் பலரிடம் நன்கொடை பெற்றும், உதவி பெற்றும் சுமார் 31,000 சதுர அடியில் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. 01.06.1997 அன்று புதிய கட்டிடத்திற்கு பால்காய்ச்சும் விழா நடைபெற்றது. 03.08.1997 அன்று நமது திருத்தங்கல் நாடார் கல்லூரி தொடங்கப்பட்டது.

24.08.1997 அன்று திரு. P. ராஜரத்தினம் அவர்கள் தலைமையில் திரு. M.S. சின்னத்தம்பி நாடார் மற்றும் திரு. சு.கு. சோமசுந்தரம் அவர்கள் முன்னிலையில்

அண்ணாச்சி திரு. ராஜா K.S.P. கணேச நாடார் அவர்கள் திருகரத்தால் திறந்து வைக்க திருமதி சக்கரத்தாய் கணேசன் , திருமதி லட்சுமி முத்தையா ஆகியோர் குத்துவிளக்கேற்ற திருத்தங்கல் நாடார் கல்லூரியின் புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. திரு. ராஜா K.S.P. கணேச நாடார் - சக்கரத்தாய் வளாகத்தை திரு. முகமது மீரான் (ரெனால்ட்ஸ் பென் உரிமையாளர்) திறந்து வைக்க திரு. சு. குருசாமி நாடார் - மீனாம்மாள் வளாகத்தை Dr. B.P. ராஜன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பலரும் நம் கல்லூரிக்கு பெயர் சூட்டுவதற்கு நன்கொடை கொடுக்க முன்வந்த போதிலும் அதனை தவிர்த்து நம் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையில் **திருத்தங்கல் நாடார் கல்லூரி** என்ற பெயர் வைத்து நாம் அனைத்து உறவின்முறைகளுக்கும் முன்மாதிரியாக இருக்கின்றோம். **திருத்தங்கல் நாடார் கல்லூரி** (ஆண்களுக்கு மட்டும்) என்ற பெயரில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. 1997 இல் B.com., B.Com (CS)., B.B.A., B.Sc., (Maths), B.Sc., (CS) ஆகிய 5 பாட பிரிவுகளுடன் நம் கல்லூரி தொடங்கப்பட்டது. பின்பு படிப்படியாக B.C.A., B.Com (ISM), M.Sc (CS&T), M.Sc (IT) ஆகிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

2001 டிசம்பரில் திரு. S.M. தங்கச்சாமி நாடார் தலைமையில் நிர்வாக மாற்றத்திற்கு பிறகு கல்லூரியில் மாணவர் சேர்க்கையை அதிக படுத்தும் நோக்கில் 2002 - 2003 இல் இருந்து 'திருத்தங்கல் நாடார் கல்லுரி' இருபாலரும் பயிலும் கல்லூரி என பல்கலைக்கழக அனுமதி வாங்கப்பட்டது. அன்றைய நிர்வாகத்தினரின் பெரும் முயற்சியாலும், குறிப்பாக திரு. S.M. சுப்பையா, திரு. A.D. சுப்பையா, திரு. M.G.E. செல்வராஜ் அவர்களின் பெரும் முயற்சியால் உறவின்முறையில் இருந்து சம்பளம் கொடுக்க பணம் பெறுவது தவிற்கப்பட்டு கல்லூரியில் உபரி வருமானம் வரும் வகையில் கல்லூரியை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்றனர்.

30.11.2003 அன்று நமது உறவின்முறையின் 47வது ஆண்டு விழா திருத்தங்கல் நாடார் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. அன்று சுமார் 14,000 சதுர அடியில் M.G. இருளங்குடி நாடார் - வள்ளியம்மாள் உள் கலையரங்கத்துடன் கூடிய M. குருசாமி நாடார் வள்ளியம்மாள் வளாகத்துடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. மேலும் 15.07.2005 அன்று 14,000 சதுர அடியில் முதன்மை கட்டிடத்துடன் இணைத்த A.S. வெள்ளைச்சாமி நாடார் - பாக்கியம் வளாகத்துடன் கட்டிடம் கட்டி திறக்கப்பட்டது .

நம் திருத்தங்கல் நாடார் கல்லூரி சென்னை பல்கலைகழகத்திற்கு உட்பட்ட தனியார் கல்லூரியில் சிறந்த கல்லூரியாக நடைபெற்று வரும் வேலையில் நாம் பள்ளி கல்வி சேவையில் துவக்கும் முயற்சியாக 30.04.2004 அன்று சென்னை- 19. எண்:1051. திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் தாங்கலில் உள்ள 14.5 மனை இடத்தை அன்றைய நிர்வாகத்தின் ஒற்றுமையாலும் திரு. S.M. தங்கச்சாமி நாடார் அவர்கள் தலைமையில் திரு. S.M. சுப்பையா அவர்களின் பெருமுயற்சியாலும் திரு. M.G.E. செல்வராஜ் மற்றும் A.D. சுப்பையா அவர்களின் ஒத்துழைப்பாலும் சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டுக்கு வாங்கப்பட்டது.

நமது சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டு மற்றும் திருத்தங்கல் நாடார் எஜூகேஷனல் சொசைட்டி ஆகிய இரண்டு அமைப்பையும் ஒன்றாக இணைப்பதென முடிவு செய்து 03.05.2007 அன்று திருத்தங்கல் நாடார் எஜூகேஷனல் சொசைட்டி நமது சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டுடன் இணைக்கப்பட்டது. அன்றைய தேதியில் இருந்து திருத்தங்கல் நாடார் எஜூகேஷனல்

சொசைட்டி பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களும் சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டுக்கு சொந்தமாகும்.

திரு. M.G.E. செல்வராஜ் அவர்கள் கல்லூரி தாளாளராக இருந்த காலகட்டத்தை கல்லூரியின் அடிப்படை வளர்ச்சியில் ஒரு மைல் கல் என்று கூறலாம். மேலும் மாணவர்கள் சேர்க்கைக்கு ஏற்பவும் புதிய பாடபிரிவுக்கு தேவையான வகுப்பறைக்காகவும் 01.02.2009 அன்று சுமார் 21,000 சதுர அடியுடன் கூடிய P.ராஜய்ய நாடார் - R. கமலாம்மாள் வளாகத்துடன் கூடிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவும், நமது உறவின்முறையின் 53ம் ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

நாம் வாங்கிய சென்னை- 19. எண்:1051. திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் தாங்கலில் உள்ள 14 மனை இடத்தில் பள்ளி கட்டிடம் கட்டுவதற்காக C.M.D.A வில் தரைதளம் மற்றும் மூன்று மாடிக்கு முறையாக அனுமதி பெறப்பட்டு 23.04.2009 அன்று பூமி பூஜை செய்து கட்டிட வேலை துவங்கப்பட்டது. அன்றைய நிர்வாகத்தின்

| | **உறவின்முறை நிர்வாகக்குழு** | **கல்லூரி நிர்வாகக்குழு** | **பள்ளி நிர்வாகக்குழு** |
|---|---|---|---|
| **தலைவர்** | A. மாரியப்பன் B.E., M.I.E., | S.M. சுப்பையா | S.M. தங்கச்சாமி நாடார் |
| **துணைத்தலைவர்** | J. பெரியாண்டவர் B.E., | T. செந்தில் குமார் | M. பால்ராஜ் |
| **செயலாளர்** | S. முருகசாமி | M.G.E. செல்வராஜ் | T. ராஜ்குமார் B.B.A., |
| **துணைச்செயலாளர்** | M. செல்லப்பா | K. முருகவேல் | T. சந்திரமோகன் |
| **பொருளாளர்** | A.D. சுப்பையா | A.S.V. ரவி B.com., | A. பாக்கியராஜ் B.A., |
| **நிர்வாகக்குழு உறுப்பினர்கள்** | M. மதிவாணன் | S.K.A. சவரிமலையான் B.Com., | S.K. கனகவேல் |
| | M. செல்வப்பழம் | A.S.P.M.M. பால்ராஜ் B.B.A., | S. காளியப்பன் |
| | G. ராஜாக்கணி | Dr. R. கதிரேசன் B.D.S., | M. நாராயணசாமி |
| | S. தங்கத்துரை M.C.A., | A.S.D.அண்ணாமலைச்சாமி B.Sc., | A.S.J. பாலகுருசாமி |
| | S. சென்னைஅரசன் | S.C. அழகேசன் B.Sc., | S. சந்திரசேகரன் |
| | M.G.E. செல்லப்பழம் | | A.M. வேல்முருகன் |

முயற்சியாலும் திரு. S.M. சுப்பையா, திரு. S. முருகசாமி அவர்களின் உழைப்பாலும் சிலம்பு வாத்தியார் திரு. ச.மா. குருசாமி நாடார் - வள்ளியம்மாள் வளாகம், அருள்மிகு மாலையம்மன் வளாகம் திருத்தங்கல் நாடார் கொட்டப்பாக்கன் வகையறா தாயாதிகள் சங்கம் சென்னை & திருத்தங்கல் மற்றும் M.G. இருளங்குடி நாடார் - வள்ளியம்மாள் வளாகம் மற்றும் Er.A. மாரியப்பன் - ராமுத்தாய் கலை அரங்கம் சேர்த்து சுமார் 31,000 சதுர அடி உள்ள தரைத்தளம் மற்றும் முதல் மாடியுடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 19.02.2010 அன்றய தேதியில் பால் காய்ச்சும் விழா நடைபெற்றது.

06.06.2010 அன்று பள்ளித்தலைவர் திரு. S.M. தங்கச்சாமி நாடார் அவர்கள் தலைமையிலும் உறவின்முறை தலைவர் திரு. A. மாரியப்பன் அவர்கள் தலைமையிலும் நமது கல்லூரியின் தலைவர் திரு. S.M. சுப்பையா அவர்கள் திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி கட்டிடத்தை திறந்து வைக்க திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பள்ளி செயலாளர் திரு. T. ராஜ்குமார் அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருமதி. ராமுத்தாய் மாரியப்பன், திருமதி காளிஸ்வரி சுப்பையா, திருமதி தனலட்சுமி முருகசாமி, திருமதி தமிழ்மணி சுப்பையா, திருமதி பரிமளா செல்வராஜ், திருமதி பவானி பெரியாண்டவர் குத்துவிளக்கை ஏற்றி வைத்தார்கள். உறவின்முறை நிர்வாகிகள் கல்வெட்டை உறவின்முறை செயலாளர் திரு. S. முருகசாமி அவர்கள் திறந்து வைத்தார். கல்லூரி நிர்வாகிகள் கல்வெட்டை உறவின்முறை துணைத்தலைவர் திரு. J. பெரியாண்டவர் அவர்கள் திறந்து வைத்தார். பள்ளி நிர்வாகிகள் கல்வெட்டை கல்லூரி செயலாளர் திரு. M.G.E. செல்வராஜ் அவர்கள் திறந்து வைத்தார், உறவின்முறை முன்னாள் நிர்வாகிகள் கல்வெட்டை திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை செயலாளர் திரு. A.

சண்முகக்கனி அவர்கள் திறந்து வைத்தார். கல்லூரி முன்னாள் நிர்வாகிகள் கல்வெட்டை திரு. S.K.A. சவரிமலையான் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சி நிரல் கல்வெட்டை திரு. A.D. சுப்பையா அவர்கள் திறந்து வைத்தார். Dr. மயில்வாகனன் நடராஜன் M.S., நீதி அரசர் திரு. P. ஜோதிமணி M.L., அவர்களும் சிறப்புரையாற்ற, உறவின்முறை துணைச்செயலாளர் திரு. M. செல்லப்பா அவர்கள் நன்றியுரையாற்றினார்கள்.

14.06.2010 அன்று திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளி சுமார் 508 மாணவ மாணவியர்களுடனும் 13 ஆசிரியர்களுடனும் 8 அலுவலக மற்றும் உதவி ஊழியர்களுடனும் துவங்கப்பட்டு தற்பொழுது வடசென்னையில் CBSE பாடப்பிரிலே சிறந்த பள்ளியாக நடைபெற்று வருகிறது. மேலும் பள்ளி விளையாட்டு மைதானத்திற்காக சென்னை 19. எண். 39, T.H. ரோடில் உள்ள சுமார் 5 மணை இடத்தை 14.07.2011 தேதியில் கிரயம் செய்யப்பட்டு பள்ளி விளையாட்டு மைதானமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

திருத்தங்கல் நாடார் வித்யாலயா விரிவாக்கத்திற்காக CMDA அனுமதி பெற்று இரண்டாம் மற்றும் மூன்றாம் தள வேலை துவங்கபெற்று திரு. A.D. சுப்பையா அவர்களின் முயற்சியால் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் திறப்பு விழா நடைபெற்றது.

திருத்தங்கல் நாடார் கல்லூரியில் வகுப்பறை தேவைக்காக M.G. இருளங்குடி நாடார் - வள்ளியம்மாள் வளாகத்துடன் கூடிய சுமார் 7,000 சதுர அடி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பால் காய்ச்சும் விழா நடைபெற்றது. அன்றைய தினத்திலே திறந்தவெளி கலையரங்கத்துடன் கூடிய கட்டிடத்திற்காக பூமி பூஜை செய்யப்பட்டு அதற்கான வேலைகள் துவங்கப்பட்டன. திரு. S.K.A. சவரிமலையான் அவர்களின் முயற்சியால் 80 அடி அகலத்துடன் கூடிய திறந்தவெளி கலையரங்கத்துடன் சுமார் 12,300 சதுர அடி கூடிய கட்டிடம் கட்டி முடிக்கபப்பட்டது. 24.02.2013 அன்று விழா தலைவர் திரு. S.M. சுப்பையா அவர்கள் தலைமையில் திரு. A. மாரியப்பன், திரு. S. முருகசாமி மற்றும் திரு. R. பாண்டியன் அவர்கள் முன்னிலையில் திரு. S.K.A. சவரிமலையான் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் கலையரங்கத்தை திறந்து வைத்தார். திறந்தவெளி கலையரங்கத்திற்கு நன்கொடை கொடுக்க சிலர் முன்வந்த போதிலும் அதனை தவிர்த்து கல்வி கண் திறந்த கர்ம வீரர் காமராஜருக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் பெருந்தலைவர் காமராஜர் கலையரங்கம் என்று பெயர் சூட்டப்பட்டது. கலையரங்கத்தின் மேல் முதல் தளத்தில் S. ஆறுமுக நாடார் -மீனம்மாள் அறக்கட்டளை பெயரில் கருத்தரங்கமும், இரண்டாம் தளத்தில் வகுப்பறைகளுக்கான கட்டிடமும் கட்டி திறக்கப்பட்டன.

திருத்தங்கல் நாடார் கல்லூரியில் மாணவர்களின் தேவைக்கேற்ப புதியதாக சிற்றுண்டி உணவகம் கட்ட முடிவு செய்து சுமார் 22,000 சதுர அடியில் 07.12.2014 அன்று திரு. S.K.A. சவரிமலையான் அவர்கள் தலைமையில், திரு. S.M. சுப்பையா திரு. M.G.E. செல்வராஜ் அவர்கள் முன்னிலையில் பாண்டிச்சேரி திரு. A. காளிஸ்வரன் - அழகு மீனாட்சி சிற்றுண்டி உணவு கூடத்தை திரு. A. மாரியப்பன் அவர்கள் திறந்து வைத்தார். திருத்தங்கல் திரு. P. ராமர் - ராஜேஸ்வரி உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய கட்டிடத்தை திரு. A.D. சுப்பையா அவர்கள் திறந்து வைத்தார். முதல் மாடியில் திரு. பாண்டிச்சேரி திரு. T.S.K. அண்ணாமலை நாடார் - தங்கதுரைச்சியம்மாள் நூலக வளாகத்தையும் மேலும் வகுப்பறைகளும் கட்டி திறப்புவிழா நடைபெற்றது.

04.07.2015 அன்று 12,000 சதுர அடியில் திறந்தவெளி கலையரங்கத்தில் ஷெட் அமைக்கப்பட்டு திருத்தங்கல் நாடார் கல்லூரியின் 15வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. 04.06.2016 அன்று நமது கல்லூரியில் மேதகு தமிழ்நாடு மாநில ஆளுநர் ரோசையா அவர்களை அழைத்து 16வது பட்டமளிப்பு சிறப்பாக நடைபெற்றது.

திருத்தங்கல் நாடார் கல்லூரி செயலாளர் திரு. S.K.A. சவரிமலையான் அவர்களின் முயற்சியால் நமது கல்லூரியில் 2014-2015 முதல் Placement Cell உருவாக்கப்பட்டு 293 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்று தரப்பட்டது. 2015 - 2016 ஆம் ஆண்டு 401 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்று தரப்பட்டது.

திருத்தங்கல் நாடார் கல்லூரி பல்கலைகழக அளவில் தேர்ச்சி பெற்று முதல் இடம் பெறும் மாணவர்களுக்கு ரூ. 25,000/- மதிப்புள்ள பரிசும் , இரண்டாம் இடம் பெறும் மாணவர்களுக்கு ரூ. 20,000/- மதிப்புள்ள பரிசும் மூன்றாம் இடம் பெறும் மாணவர்களுக்கு ரூ. 15,000/- மதிப்புள்ள பரிசும் நான்கு முதல் பத்தாவது இடம் பெறும் மாணவர்களுக்கு ரூ. 10,000/- மதிப்புள்ள பரிசும் பதினொன்றாவது முதல் இருபதாவது இடம் பெறும் மாணவர்களுக்கு ரூ. 5,000/- மதிப்புள்ள பரிசும் உறவின்முறை சார்பாக கொடுக்கப்படுகிறது. ஒவ்வொறு ஆண்டும் பல மாணவர்கள் இப் பரிசை பெற்று வருகின்றனர்.

நமது உறவின்முறை உறுப்பினர் வீட்டு மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை தொடர்ச்சியாக பல ஆண்டுகள் கொடுக்கப்பட்டு வருகின்றது. பல மாணவர்கள் பெற்று பயனடைகின்றனர்.

திருத்தங்கல் நாடார் கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் போது 1000 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கிய மாணவ மாணவிகள் கல்வி கட்டணம் முழுமையாகச் செலுத்திய பின் அவர்களுக்கு அதில் 50% கல்வி உதவித்தொகையாக சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டு மூலம் வழங்கப்படும்.

திருத்தங்கல் நாடார் கல்லூரி மாணவ மாணவிகள் பருவ தேர்வில் (Semester) 80% மதிப்பெண் வாங்கி தேர்ச்சி பெற்றால் அடுத்த பருவ (Semester) கல்விக் கட்டணம் முழுமையாகச் செலுத்திய பின் 50% கல்வி உதவித் தொகை சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டு மூலம் வழங்கப்படும். விளையாட்டு போட்டியில் சிறந்த இடம் பெறும் மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

திருத்தங்கல் நாடார் வித்யாலயா செயலாளர் திரு. M.G.E. செல்லப்பழம் அவர்களின் முயற்சியால் 13.12.2012 அன்று நமது பள்ளிக்கு 10ம் வகுப்பு அனுமதி பெற்று 2013-2014 கல்வியாண்டு முதல் 9ஆம் வகுப்பு மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது. 2014 - 2015 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு மாணவர்கள் முழு அளவில் (100%) தேர்ச்சி பெற்றனர். 11.09.2015 அன்று 12ஆம் வகுப்புக்கான அனுமதி பெறப்பட்டது. 2016 - 2017 கல்வியாண்டு முதல் +1 வகுப்புக்கான மாணவர்கள் சேர்க்கை தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

திருத்தங்கல் நாடார் கல்லூரியில் வகுப்பறை தேவைக்காக ராஜையா நாடார் கமலாம்மாள் வளாகத்தில் மின் தூக்கி வசதியுடன் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு 05.06.2016 அன்று திறந்து வைக்கப்பட உள்ளது. 05.06.2016 அன்று நமது சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டின் 60ஆம் ஆண்டு வைரவிழா சிறப்பாக நடைபெற உள்ளது.

வடசென்னையில் **திருத்தங்கல் நாடார் அரங்கம்** ராசியான திருமண மண்டபம் என்று பலரும் சொல்லதக்க வகையில் குறைந்த வாடகையில் நிறைந்த தரத்துடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

திருத்தங்கல் நாடார் கல்லூரி சுமார் 2700 மாணவ மாணவியர்களுடனும் , 105 ஆசிரியர்களுடனும் 60 அலுவலக ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுடனும் சென்னை

பல்கலைகழக அளவில் சிறந்த கல்லூரியில் ஒன்றாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளியில் சுமார் 1600 மாணவ மாணவியர்களுடனும் 63 ஆசிரியர்களுடனும் 24 அலுவலக ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுடனும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

நமது திருத்தங்கல் நாடார் கல்லூரியை பல்கலைக்கழகமாக உயர்த்துவதற்கும் திருத்தங்கல் நாடார் வித்யாலயா பள்ளியை மாநிலத்திலேயே சிறந்த பள்ளியாக உருவாக்குவதற்கும், மருத்துவ சேவையை துவங்குவதற்கும் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளித்தும் இவ் உறவின்முறை பல நூற்றாண்டு வரலாறு காண ஒற்றுமையுடன் உழைக்க வேண்டுகிறோம்.

S.M. சுப்பையா
தலைவர்
சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார்
உறவின்முறை தர்மபண்டு